BUKIT TIMAH PRIMARY SCHOOL

STRIVE FOR THE BEST

# PRIMARY SCHOOL
# SEMESTRAL ASSESSMENT 1 - 2014
# HIGHER MOTHER TONGUE – TAMIL
# PRIMARY 6 HMT

**Name:** ______________________

**Class: Pr. 6(______)**

**Date:** ____________

| |
|---|
| / 60 |

**Parent's signature:**__________________________

**INSTRUCTIONS:**

1. DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
2. FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
3. ANSWER ALL THE QUESTIONS.

MORE TESTPAPERS AVAILABLE AT TESTPAPERSFREE.COM

P6 HMT

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **<u>ஒன்றைத்</u>** தேர்ந்தெடுத்து **<u>150 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**<u>வினா 1</u>**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நான் பங்கேற்ற விவாதப் போட்டி**

தொடக்கநிலை மாணவர்களுக்கான விவாதப் போட்டியில் பங்கேற்ற உனக்கு சிறந்த பேச்சாளருக்கான பரிசு கிடைத்தது. உன் மனநிலையையும் அதற்காக நீ மேற்கொண்ட பயிற்சிகளைப் பற்றி எழுது.

**<u>வினா 2</u>**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த என்னை பேரிடியின் ஓசை எழுப்பியது. அப்போதுதான் என் படுக்கை அறை சன்னல் திறந்திருப்பதைப் பார்த்தேன். அதை மூடச் சென்ற போது......................

Name . ________________

## இரண்டாம் பகுதி

**A1. பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன், (Q1). **தமக்கு** விரைவில் மரணம் வந்துவிடுமோ எனப் பயந்து கொண்டு இருந்தான். அதை அறிந்த அவனது அமைச்சர் அரசனின் வீண் பயத்தைப் போக்க விரும்பினார். (Q2 )***ஆனால்*** அவர் முனிவர் ஒருவரை அணுகி, மன்னனின் பிரச்சனையைக் கூறி அவரை அரண்மனைக்கு அழைத்து
(Q3) **வந்தார்கள்.**

அரசன் முனிவரை வணங்கித் தன் அச்சத்தை அவரிடம் கூறினான். “எனக்கு மரணம் வராமல் தடுக்க வேண்டும்.” என்று அரசன் வேண்டினான். முனிவர், (Q4 ) **புன்னகையும்** புரிந்தவாறே, “உனக்கோ இப்பொழுது இளம் வயது. ஆனால், நீ எப்பொழுதும் இளமையுடன் இருக்க முடியுமா? சில ஆண்டுகளுக்குப் பிறகு நீ கிழவனாகி விடுவாய். அப்போது நீ அதிக நாள்கள் உயிர் வாழ விரும்ப மாட்டாய்” , என்று அரசனிடம் கூறினார். முனிவரின் பேச்சைக் கேட்ட மன்னனுக்குப் புத்தி (Q5 ) **தெலிந்தது**. அவன் தன் வீண் பயத்தை விட்டொழித்தான்.

| | |
|---|---|
| Q1. | |
| Q2. | |
| Q3. | |
| Q4. | |
| Q5. | |

A2. வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

Q6. வழக்கறிஞரின் வாதத் திறமையால் நிரபராதி தண்டனையிலிருந்து தப்பினார்.

நிரபராதி தண்டனையிலிருந்து தப்ப ______________________________

______________________________________________________.

Q7. அரசன், புலவரின் அறிவையும் அடக்கத்தையும் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினான்.

புலவரின், அறிவும் அடக்கமும் அரசனை ______________________________

______________________________________________________.

Q8. மாணவர்களின் சிந்தனைத் திறன்கள் வளர, அரசாங்கம் பல புதிய உத்திகளைக் கையாள்கிறது.

மாணவர்களின் சிந்தனைத் திறன்கள் வளர, பல புதிய உத்திகள் ______________________

______________________________________________________.

Q9. தன் மகன் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற செய்தியைக் கேட்ட தாய் பேரானந்தம் அடைந்தார்.

தன் மகனின் தேர்வு முடிவுகள் தாய்க்கு ______________________________

______________________________________________________.

## A3. வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

அம்பு எய்வதில் வல்லவனான வேடன் ஒருவன் வழக்கம் போல வேட்டைக்குச் சென்றான். களைப்பு மிகுதியால் ஒரு மரத்தின் Q10 __________(அடி) இளைப்பாற எண்ணினான். அங்கே, ஒரு வெள்ளைநிறப் பாம்பு படுத்திருந்தது. அதை அவன் பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு பருந்து வந்து அப்பாம்பைத் தூக்கிச் சென்றது. பாம்பு, "என்னைக் காப்பாற்றுங்கள்!" என உரக்கக் Q11 __________(கத்தியது), வேடன் செவியுற்றான். அவன் சிறிதும் தாமதிக்காமல், ஓர் அம்பை எடுத்துக் குறி வைத்துப் பருந்தை நோக்கி எய்தான்.

அந்த அம்பு Q12__________(பருந்து) கால்களில் பட்டுக் காயத்தை ஏற்படுத்தியது. Q13__________(காயம்), குருதி வழிந்தது. வலி பொறுக்க முடியாத பருந்து, பாம்பை விட்டுவிட்டது. உயிர் தப்பிக் கீழே விழுந்த அந்தப் பாம்பு வேடனுக்கு நன்றி கூறி, பொற்காசு ஒன்றை அவனது காலடியில் போட்டது.

**பின்வரும் பகுதியில் 14 முதல் 17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

வேழ நாட்டை மானவர்மன் என்னும் மன்னர் நீதி தவறாது ஆண்டு வந்தார். அவருக்கு அறிவுமிக்க அமைச்சர் ஒருவரும் சிறந்த தளபதி ஒருவரும் இருந்தனர். அரசர் அந்த இருவரின் துணையோடு நாட்டில் நல்லாட்சி புரிந்து வந்தார்.

மன்னர் பெரும்பாலும், அமைச்சரின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து வந்தார்.

Q14. ____________. நாளடைவில் தளபதிக்கு அமைச்சர் மீது அதிகச் சினம் உண்டாயிற்று.

Q15. ________________.

ஒரு நாள், தளபதி தம் தேரில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே அமைச்சர் வந்தார்.

Q16. ______________. இதைக் கவனித்த தேரோட்டி, "தளபதியாரே! தாங்களும் அமைச்சரும் நம் மன்னரின் இரு கண்கள். அவரைக் கண்டு ஏன் விலகிச் செல்கிறீர்கள்? உங்களது துணையோடுதான் அவர் இந்நாட்டைச் சிறப்பாக ஆள்கிறார்.

Q17. ________________. அவர் மீது பகை வேண்டாம்." என்று கூறியதும், தளபதி தன் தவற்றை உணரத் தொடங்கினார்.

1. அவர் அமைச்சரை மன்னர் முன்னிலையில் அவமானப்படுத்துவதற்குச் சமயம் பார்த்திருந்தார்.
2. ஒரு நாள் அரசரும் தளபதியும் சண்டைபோட்டுக் கொண்டனர்.
3. அரசருக்கு நல்ல பாடம் கற்றபிக்க வேண்டும் என்று திட்டமிட்டார்.
4. எனவே, தளபதிக்கு அமைச்சர் மீது பொறாமை ஏற்படத் தொடங்கியது.
5. உடனே, தளபதி அவரை நோக்கிச் சென்றார்.
6. அமைச்சர் உங்கள் மீது பெரு மதிப்பு வைத்திருக்கிறார்.
7. உடனே, தளபதி, தேரோட்டியிடம் வேறு திசையில் செல்லுமாறு கூறினார்.
8. அமைச்சர் எதையும் தந்திரமாகச் செய்பவர்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14. | |
| Q15. | |
| Q16. | |
| Q17. | |

## C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 – மதிப்பெண்கள் )

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

ஜே. கே. ரவுலிங் ( JKRowling) என்பவர் வெகு சாதாரணமான ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் ***புலமை*** பெற்றிருந்ததால் ஆய்வறிக்கைகளை மொழிபெயர்ப்புச் செய்யும் தொழில் புரிந்து வந்தார். தினமும் ரயிலில் பயணம் செய்யும்போது, ~~ஏதாவது படித்துக் கொண்டே வருவது அவரது வழக்கமாக இருந்தது.~~ எளிய கதைப்புத்தகங்கள், விறுவிறுப்பு நாவல்கள், துப்பறியும் கதைகள், திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த கதை நூல்கள் போன்றவை அவரது சிந்தையைக் கவர்ந்தன., இவற்றின் மூலமே, தானும் ஒரு சிறந்த எழுத்தாளராக வர வேண்டும் என்னும் கனவைக் கொண்டிருந்தார். கதை எழுதுவதைத் தன் பொழுதுபோக்காகக் கொண்டு சிறிது சிறிதாக எழுதத் தொடங்கினார். இவர் சிறுமியாக இருந்தபோது, நூறு கதைகளுக்கு மேல் தனது தாய்க்கும் சகோதரிக்கும் சொல்லியிருக்கிறார்.

ஒரு நாள், தனது வழக்கமான ரயில் பயணத்தின் போதுதான், அவர் வாழ்க்கைப் பாதையையே மாற்றியமைக்கக் கூடிய யோசனை ஒன்று அவரது மனதில் உதித்தது. சன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது, சட்டென ஒரு குட்டிப் பையன், அவர் கற்பனையில் தோன்றினான். 'ஹாரி' என்று தன்னையறியாமலேயே அவனுக்கு அப்போதே ஒரு பெயரும் அளித்தார். ~~அவரது கற்பனையில்,~~ சுட்டிப் பையன், 'ஹாரி' , சாதாரண பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல், மாய மந்திர வித்தைகளைக் கற்றுக்கொடுக்கும் ஓர் அதிசயப் பள்ளிக்குச் செல்கிறான். அவனைப் போலவே, அங்குப் பல பிள்ளைகள் படிக்க வருகிறார்கள். மந்திரவாதி ஆசான்களைக் கொண்ட ஒரு மாயாஜால உலகம் அது. அனைத்துச் சிறுவர்களும் ஏங்கும் வண்ணம் ஒரு கனவு உலகத்தைத் தன் கற்பனையில் உருவாக்கியதும், பரபரவென ரத்தம் சூடேறி வேகமாக ஓடத்தொடங்கியது போல் அவர் உணர்ந்தார். 'ஹாரி' என்கிற அந்தக் கற்பனைப் பையன் அவர் மனதில் அதிவேகமாக வளரத் தொடங்கினான்.

அக்***கணமே***, விறுவிறுவென 'ஹாரி பாட்டர்' (Harry Potter), கதையை எழுதத் தொடங்கினார். முதல் நாவல் வெளியாகி, பல லட்சங்களை அவருக்குப் பெற்றுக்

கொடுத்தது. **"அந்த வெற்றி தந்த அதிர்ச்சியில் நான் இறந்து விடுவேனோ, என்று நினைத்தேன்"** என்று குறிப்பிட்டார் ரவுலிங்.

ரவுலிங் இறக்கவில்லை. ஏழு அருமையான சிறுவர் நாவல்களைத் தந்து **இறவாப் புகழ்** பெற்றுள்ளார். உலகம் என்றென்றும் ரவுலிங்கையும் அவரது கற்பனைக் கதாபாத்திரமான ஹாரியையும் நிச்சயம் மறக்காது.

வினாக்கள்

Q18. ரவுலிங்கின் மொழிப்புலம அவருக்கு எவ்வகையில் உதவியது? (3)

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

Q19. தானும் ஒரு சிறந்த எழுத்தாளராக வரவேண்டும் என்னும் எண்ணம் அவருக்கு எவ்வாறு ஏற்பட்டது? (4)

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

Q20. ரயில் பயணத்தின் போது ரவுலிங்கின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்த சம்பவம் எது? (4)

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

Q21. ரவுலிங்கின் கனவு உலகத்தைக் கண்டு அனைத்துச் சிறுவர்களும் ஏன் ஏங்குவர்?(4)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q22. **"அந்த வெற்றி தந்த அதிர்ச்சியில் நான் எறந்து விடுவேனோ, என்று நினைத்தேன்"** என்று ஏன் ரவுலிங் குறிப்பிட்டார்? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q23. ரவுலிங் **"இறவாப் புகழ்"** பெற்றவர் என்று கருதப்படுவதற்குக் காரணம் என்ன? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. புலமை - ____________________ (2)

ஆ. கணமே - ____________________ (2)

# P6 HMT
# TESTPAPER 6

<u>ஓர் ஊரில் அரசன் ஒருவன்........</u>

1. தனக்கு 2. அதனால் 3. வந்தார் 4. புன்னகை 5. தெளிந்தது

6. வழக்கறிஞரின் வாதத் திறமையே காரணமாகும்.

7. ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தது/மூழ்கடித்தது.

8. அரசாங்கத்தால் கையாளப்படுகின்றன.

9. பேரானந்தத்தை அளித்தது.

10. அடியில் 11. கத்தியதை 12. பருந்தின் 13. காயத்திலிருந்து

14. 4 15. 1 16. 7 17. 6

18. ரவுலிங்கின் மொழிப்புலமை அவருக்கு ஆய்வறிக்கைகளை மொழிப்பெயர்ப்புச் செய்யும் தொழிலைப் புரிய உதவியது.

19. தினமும் ரயில் பயணத்தின்போது அவர் படித்த எளிய கதைப் புத்தகங்கள், விறுவிறுப்பு நாவல்கள், துப்பறியும் கதைகள், திகிலூட்டும் சம்பவங்கள், நிறைய கதை நூல்கள் போன்றவை அவரது சிந்தனையைக் கவர்ந்ததால் தானும் ஒரு சிறந்த எழுத்தாளராக வரவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

20. சன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சட்டென ஒரு குட்டிப் பையன் அவர் கற்பனியில் தோன்றியபோது அவனுக்கு "ஹாரி" என்று தன்னையறியாமலேயே அவனுக்கு அப்போதே ஒரு பெயரை அளித்ததோடு ஒரு கற்பனை உலகத்தை உருவாக்கியதும் பயணத்தின் போது ரவுலிங்கின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்த சம்பவம் ஆகும்.

21. மாயாஜால உலகத்தில் மாய மந்திர வித்தைகளை கற்பிக்கும் ஒரு அதிசய பள்ளி இருப்பதாலும், மந்திரவாதி ஆசான்கள் இருப்பதாலும் ரவுலிங்கின் கனவு உலகத்தைக் கண்டு அனைத்துச் சிறுவர்களும் ஏங்குவர்.

22. அவரின் கதை மிகவும் பிரபலமாகி, அது அவருக்குப் பல லட்சங்களைப் பெற்றுத் தந்ததால் ரவுலிங் "அந்த வெற்றி தந்த அதிர்ச்சியில் நான் இறந்து விடுவேனோ என்று நினைத்தேன்" என்று குறிப்பிட்டார்..

23. உலகம் எப்பொழுதும் ரவுலிங்கையும் அவரது கற்பனைக் கதாப்பாத்திரமான ஹாரியையும் திண்மையாக மறக்காது என்பதால் அவர் இறாவாப் புகழ்ப் பெற்றவர் என்று கருதப்படுகிறது..

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. திறமை
ஆ. நொடியே